பிரிவு 2. பட்டினத்தார்

பட்டினத்தார் தமிழ்நாட்டில் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவம் தந்த சிவச் செல்வராவார். கடலோடி பொருள்தேடும் வணிகர் குலத்தில் அவதரித்த செல்வர். வாழ்வின் செல்வச் செருக்கையும், போகங்களையும் வெறுத்து, இறைவன் திருவருளை நாடி ,கட்டிய கோவணமும், நாவில் சிவநாமமும் உடன்வர கால் போன போக்கில் நடக்கலானார். “காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே” எனும் பொன்னான போதனையை உள்ளத்தில் கொண்டு, அதுவே சத்தியம், அதுவே இறைவன் நமக்களித்த வரம் என்று உணர்ந்து அதனை ஒரு ஓலை நிறுக்கில் எழுதிப் போட்டுவிட்டுத் துறவறம் பூண்டார். ஊர் ஊராய்ச் சென்று சிவதரிசனம் செய்தார்.

பட்டினத்தார் பாடல்கள் ஈசன் இணையடி நிழலே நாம் ஆசைப் படக்கூடிய நிரந்தர பேரின்பம் என்பதை பறைசாற்றும் பாடல்கள். அவை சொல்லுகின்ற சொல் கடுமையாய், உள்ளத்தைச் சுடும்படியாய், உள்ளதை உள்ளபடி கேட்கக் கஷ்டமானதாக இருந்தாலும் அதுவே முற்றிலும் உண்மை என்பதை உணரச் செய்யும் பாடல்கள்.

பட்டினத்தார் பாடல்கள் உண்மையை விண்டுரைக்கும் சத்திய வாக்கு என்பதால், மருந்து கசக்குமென்றாலும், உண்மை சுடும் என்றாலும், பிறவிப் பேற்றுக்கு அதுவே மருந்து என்பதால் பட்டினத்தாரையும் அவர் தெய்வீகப்பாடல்களையும் அனைவரும் ஏற்றிபோற்றுவோம்.